டாக்டர் எம். பி. சேகர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரம்பூர் தொகுதி தாழ்த்தப்பட்ட மக்கள் வாழும் பகுதி. தாழ்த்தப்பட்ட மக்களில் மிகவும் தாழ்த்தப்பட்ட மக்கள் உள்ள பகுதி. தொழிற்சாலைகள் நிறைய உள்ள பகுதி. பெரியார் நகர் ஆஸ்பத்திரி இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அந்த பெரியார் நகர் என்பது புரசை தொகுதி யிலும் இருக்கிறது, பெரம்பூர் தொகுதியிலும் இருக்கிறது. பெரம்பூர் தொகுதிக்குச் வர வேண்டிய இந்த பெரியார் நகர் ஆஸ்பத்திரி புரசை தொகுதிக்குச் சென்று விட்டது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து பெரம் பூர் தொகுதிக்கும் ஒரு மருத்துவமனை கட்டித்தர முன்வருவாரா என்று பணிவன்போடு கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியார் நகர் மருத்துவமனை ஏற்கனவே கட்டி முடிக்கப்பட்டு விட்டது. இனிமேல் அதை இந்தத் தொகுதிக்கு கொண்டு வருவது என்பது முடியாத காரியம். எனவே, தொகுதிக்கு ஒரு மருத்துவமனை கட்டுவது நோக்கம் அல்ல. சென்னையில் பரவலாக எந்தெந்த இடத்தில் மருத்துவ மனை தேவை என்பதை அறிந்து, இருக்கிற ஜனத்தொகையை மொத்தமாக கணக்கிட்டுத் தான் செய்ய முடியுமேயொழிய ஒரு தொகுதிக்கு என்று கணக்கிட்டுச் செய்ய முடியாது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களைப் பொறுத்தவரையில் அவருடைய தொகுதியில் ஒரு மருத்துவமனை வேண்டுமென்று கேட்டிருக் கிறார்கள். அதைச் செய்வதற்கு இயலாது. மற்றபடி இருக்கிற மருத்துவமனைகளில் என்னென்ன முன்னேற்றம் வேண்டுமென்று அவர்கள் தெரிவிக்கிறார்களோ அதற்கான நடவடிக்கையை இந்த அரசாங்கம் எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 26, திரு. ஏ. தா. பொன்னுவேலு, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

26—

பெரம்பலூரிலிருந்து அரியலூர் வரை புறநகர் பேருந்து விடுதல்

*9780—திரு. ஏ. தா. பொன்னுவேலு :

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரம்பலூரிலிருந்து ஆலத்தூர் கேட், கொளக்கா நத்தம் வழியாக அரியலூர் வரை புறநகர் பேருந்து விட அரசு ஆவன செய்யுமா ?

1993 பிப்ரவரி 9]

(ஆ) ஆம் எனில், எப்பொழுது முதல் விடப்படும் ?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : வினாவில் கோரப்பட்டுள்ள வழித்தடத்தில் தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழகப் பேருந்து ஒன்றின் மூலம் இரண்டு நடைகள் இயக்குவதற்கான நடவடிக்கைகளை அக்கழகம் எடுத்து வருகிறது.

திரு. ஏ. தா. பொன்னுவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலக நாடுகளுடைய $7\frac{1}{2}$ கோடி தமிழர்களுடைய இதயத் துடிப்பாகவும், தமிழக மக்களுடைய உயிர் மூச்சாகவும், இன்றைக்கு பொற்கால ஆட்சி நடத்திக் கொண்டிருக்கிற புரட்சித் தலைவி அவர்களுடைய பொற்கால ஆட்சியில் ஏழை எளியோர்கள் வாழ்கிற என்னுடைய வரகூர் தொகுதி மிகவும் பின்தங்கிய தொகுதியாக இருக்கிறபடியால், அதிலும் குறிப்பாக ஆலத்தூர் ஒன்றியத்தில் பேருந்து வசதியே இல்லாத ஒரு அவல நிலை இருப்பதால், பொற்கால ஆட்சி நடத்திக் கொண்டிருக்கிற புனிதத் தலைவி ஆட்சியில் 1,000 மக்கள் தொகை கொண்ட ஒவ்வொரு கிராமத்திற்கும் பேருந்து வசதி கொடுக்க வேண்டுமென்ற சீரிய கருத்தின் அடிப்படையில் அந்த கிராமங்களுக்கு பெரம்பலூரிலிருந்து கொளக்காநத்தம் வழியாக அரியலூருக்கு ஒரு பேருந்து வசதி செய்து கொடுக்க ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பின்தங்கிய தொகுதியாக இருக்கிற அந்தத் தொகுதியில், பொற்கால ஆட்சி நடத்திக் கொண்டிருக்கிற புரட்சித் தலைவி ஆட்சியில் நாளை காலை அந்தப் பேருந்துகள் அங்கே இயக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி கேட்டவுடனே திரு. பொன்னுவேலு அவர்களுக்குப் பலன் கிடைத்து இருக்கிறது.

TRUTH ALONE TRIUMPHS